ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 160/53 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/53 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள்**

1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்கு விதிகளின் 2 ஆம் ஒழுங்கு விதியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பிரதமர் சிறிமாவோ ரத்வத்தே டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் கீழே குறிப்பிடப்பட்ட பல அலுவலர்களையும் அவ்வொழுங்கு விதிகளின் 66 ஆம் ஒழுங்கு விதியின் நோக்கங்களுக்காக, தகுதிவாய்ந்த அதிகாரிகளாக இத்தால் நியமிக்கிறேன்.

(1) உதவிக் கண்காணிப்பாளர் தரத்திற்குக் குறையாத ஒவ்வொரு பொலிஸ் அலுவலரும்.

(2) இலங்கைத் தரைப்படையில் ஆணைபெற்ற ஒவ்வோர் அலுவலரும்.

(3) இலங்கைக் கடற்படையில் ஆணைபெற்ற ஒவ்வோர் அலுவலரும்.

(4) இலங்கை விமானப்படையில் ஆணைபெற்ற ஒவ்வோர் அலுவலரும்.

(5) ஒவ்வோர் அரசாங்க அதிபரும்.

(6) ஒவ்வொரு மேலதிக அரசாங்க அதிபரும்.

(7) ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபரும்.

சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்க,
முதலமைச்சர்.

கொழும்பு,
1975 ஏப்பிறல் 19.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.